தனி இதழ்
ஓரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 126

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு :
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை : ஐப்பசி௴ 24௳ திங்கள் (9—11—53) ★ ★ ★ வெளியீடு : ஐப்பசி௴ 25௳ செவ்வாய் (10—11—53)


# தூத்துக்குடி - நாடெங்கும் முழக்கம்!

## "நாம் எறும்பாம்! அவர் யானையாம்!!"

### 'யானையின் காதில் எறும்பு புகுந்தால் யானையின் கதி......?"

தேனியில் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அறைகூவல்

தேனி, நவ. 5—

"நம்மை எல்லாம் எறும்புகள் என்று ஆச்சாரியார் கூறுகிறார்; அதிலிருந்து, அவர், தம்மை யானையாகக் கருதிக்கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், யானையின் காதுக்குள் எறும்பு நுழைந்துவிடுமானால் யானை படுகிற பாடு என்னவென்பதை ஆச்சாரியாருக்கு ஞாபகப்படுத்துகிறேன்."

"அரசியல் கருத்துக்களை அடிப்படையாக வைத்தே ஆச்சாரியார் சர்க்கார் தூத்துக்குடி தோழர்களைச் சிறையிலே அடைத்துவைத்து, வழக்குத தொடர்ந்திருக்கிறார்கள். தூத்துக்குடி நகரசபை காங்கிரசல்லாதார் ஆதிக்கமுள்ள நகரசபையாகும். தூத்துக்குடி சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தோழர்கள் கே. வி. கே. சாமி, நடராசன் ஆகியோர் அந்த நகரசபையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களைச் சிறையிலே அடைத்துவைத்து, மறு தேர்தல் நடத்திக் காங்கிரசுக்குப் பலம் தேடலாம் என்றே ஆச்சாரியார் நினைக்கிறார் என்று கருதுகிறேன்."

"ஆச்சாரியார் பேசும் பேச்சும், செய்யும் காரியமும் ஜனநாயகத்தையே கொலை செய்வதாகும். ஜனநாயகக் கொலை செய்து பதவியிலிருப்பவரிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?'

—இவ்வாறு, தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்கள், தேனியில் நடைபெற்ற 'தூத்துக்குடி நாள்' பொதுக்கூட்டத்தில் முழங்கினார்.

4—11—53 மாலை 6 மணிக்கு, தேனி தி. மு. கழகத்தின் ஆதரவில் 'தூத்துக்குடி நாள்' பொதுக்கூட்டம் கொடைக்கானல் தோழர் மேத்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் திண்டுக்கல் சமதர்மம், மதுரை எம். அய்யாச்சாமி ஆகியோர் பேசினர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி, மேலும் பேசியதாவது :—

"நேரு நம்மைப் பார்த்து, 'காட்டுமிராண்டிகள்' என்று கூறுகிறார் மதவெறியின் காரணமாக உலக உத்தமர் காந்தியையே சுட்டுக் கொன்ற கோட்சே கூட்டம்தான் உண்மையில் காட்டுமிராண்டிகள். காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டவுடன் வடநாட்டிலே உள்ள காட்டுமிராண்டிகள் என்ன செய்தார்கள்? முஸ்லீம்களின் கடைகளைத் தீக்கிரையாக்கினார்கள்; சொத்துக்களைச் சூறையாடினார்கள்; பிறகு கொன்றவன் கோட்சே என்று தெரிந்தபிறகு வாய் மூடிக்கிடந்தார்கள். அவர்கள் காட்டுமிராண்டிகளா? நாம் காட்டுமிராண்டிகளா?

கருப்புக் கொடி காட்டுவது காட்டுமிராண்டித்தனமாகாது. நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டுவது இதுதான் முதல் தடவையல்ல. அவருக்கு இங்கே மட்டும் காட்டவில்லை. இந்தோனேஷியாவிலேகூடக் கருப்புக் கொடிகள் காட்டினார்கள். அவர்களைப் பார்த்து, நேரு, 'காட்டுமிராண்டிகள்' என்று கூறவில்லை. அவர்கள் தங்கள் வெறுப்பைத் தெரிவிக்கிறார்கள் என்று கூறினார். ஆனால், இங்கே கருப்புக் கொடி காட்டும்போதுமட்டும், நம்மைப் பார்த்து "காட்டுமிராண்டிகள்" என்று கூறுகிறார்.

'நேருவும், நானும்கூட பிரிட்டிஷாருக்குக் கருப்புக் கொடி காட்டினோம்' என்று சென்னை கவர்னர் கூறுகிறார். பிரிட்டிஷாருக்கு அவர்கள் கருப்புக் கொடி காட்டியது சரி என்றால் வடநாட்டாருக்கு நாம் கருப்புக்கொடி காட்டுவதில் என்ன தவறு இருக்கிறது?"

## மட்டாஞ்சேரி துப்பாக்கிப் பிரயோகம்

திருவனந்தபுரம், நவ. 7—

மட்டாஞ்சேரியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் நீத்த இருவர்களின் மனைவிமார்களுக்கு சர்க்கார் தலா ரூ 250 நஷ்ட ஈடு அளிக்க அனுமதி அளித்துள்ளனர்.

# தி. மு. கழக ஏட்டை முடிவதற்குள், ஆச்சாரியார் கணக்கை சரிகட்ட காமராஜர் முயற்சி!

★★★★★★★★★★★

## கல்லக்குடி அறப்போர்

★

இன்று
119-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று
118-வது நாள்

★★★★★★★★★★★

## தென்னாட்டில் நீர்ப்பாசன திட்டங்கள்

### திட்டக் குழுவின் அனுமதி

புதுடில்லி, நவ 8—

ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனங்களுக்காக புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள 40 கோடி ரூபாயில் தென் இந்தியாவின் பஞ்சப் பிரதேசங்களுக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத்திற்கும், ஆந்திர மாநிலத்திற்கும் மொத்தம் ரூ 11½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது அதில் சென்னைக்கு ரூ. 6½ கோடியும், ஆந்திராவுக்கு 5 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து கோடி ரூபாய் செலவில் அமராவதி, வைகை திட்டங்களுக்கு 'சாங்ஷன்' அளித்திருப்பது அனைவரும் அறிந்ததே.

மேட்டூர் கால்வாய் திட்டத்தையும் சீக்கிரமே நிறைவேற்ற அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த மூன்று வது திட்டத்திற்கு ரூ. 1½ கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மேட்டூர் அணையிலிருந்து முதல் தடவையாக பாசன வசதி உண்டாகும்.

## 'எங்கள் விரோதி—பார்ப்பனர் அல்ல—பார்ப்பனியமே'

"தி. மு. கழகத்தின் கணக்கைத் தீர்த்துக் கட்டுவேன், என்று கூறும் இராசகோபாலாச்சாரியாரின் கணக்கைத் தீர்த்துக் கட்ட இப்பொழுது காமராசர் குழுவினர் பார்க்கின்றனர்."

"புதுக்கிராம பார்ப்பனர்களை நாம் தாக்கியதாகக் கூறி தூத்துக்குடி தோழர்கள்மீது சதி வழக்கு ஒன்றையும் தொடுத்திருக்கிறது, ஆச்சாரியார் சர்க்கார்; அத்தகைய எண்ணம் எங்களுக்கு இருந்திருந்தால், இன்றல்ல—காந்தியாரை, மராட்டியப் பார்ப்பான் சுட்டுக் கொன்ற அன்றே, அதை ஒரு காரணமாக வைத்தே தாக்கியிருப்போமே! ஏன் செய்யவில்லை?—எங்களுக்குத் தெரியும்—'பார்ப்பனரல்ல எங்கள் விரோதி; அவர்களுடைய கொள்கைகள் - அதாவது, பார்ப்பனீயம்தான் எங்கள் விரோதி'—என்று. எனவேதான், அன்றும் தாக்கவில்லை; இன்றும் தாக்கவில்லை; என்றும் தாக்க முற்பட மாட்டோம்."

"இன்று ஒரு கருப்பையா பாரதி கொல்லப்பட்டதைப் பிரமாதப்படுத்தும் தேசியத் தோழர்களைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்—இதுவரை உங்களால் தாக்கப்பட்டு இறந்த தி. மு. கழகத் தோழர்கள் எத்தனை பேர் தெரியுமா?—பட்டப்பகலில் வேலாயுதத்தைத் தூக்கில் தொங்க வைத்தீர்கள்; பாட்டாளி மஜீதை வெட்டிச் சாய்த்தீர்கள்; பாண்டியனைப் படுகொலை செய்தீர்கள்; இன்னும் எவ்வளவோ பேரை படுகாயப்படுத்தினீர்கள்; எங்கள் நெடுஞ்செழியன் உயிருக்கே தேனியில் உலை வைக்கப் பார்த்தீர்கள்; உங்கள் பரம்பரையினர், முன்னர், கருப்புச் சட்டை போட்டவர்களை யெல்லாம் கண்ட இடத்தில் தாக்கினார்கள்; கழகப் பெண்கள் கருப்புச் சேலை கட்டி தெருவில் வந்தால் நடுத் தெருவில் நிறுத்தி, அச்சேலையைக் கட்டாயமாக அவிழ்க்கச் செய்து, நடுத் தெருவில் நிர்வாணமாக விட்டீர்களே!—இவை எல்லாம் உங்கள் கண்முன் தெரியவில்லையா?"

—ஏ. வி. பி. ஆசைத்தம்பி

"மந்திரி சபையில் அதிகம் பேர் தேவையில்லை என்று கூறிவிட்டு, மறுநாளே 3 புதிய மந்திரிகளைச் சேர்த்துள்ளார், ஆச்சாரியார்; அதுவும், பொன்னேரி தொகுதியில் 1-லட்சம் வாக்காளர்களால் கடந்த பொதுத் தேர்தலில் வெறுத்து ஒதுக்கப்பட்ட பக்தவத்சலத்தையும், 'ஊறுகாய் வியாபாரியின் மனைவி,' என்ற ஒரே தகுதியுடைய சோதி அம்மாள் அவர்களையும் மந்திரியாக்கியுள்ளாரே? இது நேர்மையா? இதுதான் ஜனநாயகமா? தேசியத் தோழர்களே, நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்."

—காஞ்சி - சி. வி. இராசகோபால்

"பொட்டி சீராமுலுவையும், அவர் கொள்கையையும் முதலில் அலட்சியப்படுத்திய நேருதான், அதே ஆந்திர மாகாணத்தைத் துவக்கி வைத்தார், அக்டோபர் முதல் தேதியில்! இத்தகைய நேருதான், நமது தலைவர்கள் நடத்திய போராட்டத்தையும், கருப்புக் கொடி சம்பவத்தையும் இன்று அலட்சியப்படுத்தி, கிண்டலும் செய்ய முற்படுகிறார். ஆனால், நிச்சயம், நம் அண்ணாவின் காலத்திலேயே திராவிட நாடு கிடைத்தவுடன், நம் அண்ணாவிடம் மன்னிப்புக் கேட்டே தீருவார்; இல்லையேல், திராவிட நாடு ஏற்பட்டவுடன் திராவிடத்தின் சட்டசபை கட்டிடத்தின் முன்புறம் நேருவின் சிலையைப் போன்று ஒன்று செய்து வைக்கப்பட்டு, அதன் கீழே அவர் பெயரைப் பொறிப்பதற்குப் பதில் 'நான்சென்ஸ்' என்ற வார்த்தை பொறிக்கப்படும் என்பதைக் கூற விரும்புகின்றேன்."

—கே. டி. எஸ். மணி

—இவ்வாறு, செங்கற்பட்டில் கூடிய தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டத்தில் நமது தோழர்கள் முழக்கமிட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி சதி வழக்கு

### பிரத்தியேக மாஜிஸ்திரேட் நியமனம்

திருநெல்வேலி, நவ. 7—

இராமநாதபுர மாவட்டம் சாத்தூரிலுள்ள பிரத்தியேக முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட் எடுபட்டதும், அதன் மாஜிஸ்திரேட் எஸ். அரிகர அய்யர், திருநெல்வேலியில் பிரத்தியேக கோர்ட் மாஜிஸ்திரேட்டாகப் பதவி ஏற்குமாறு உயர்நீதி மன்றம் கட்டளையிட்டுள்ளதாகத் தெரிகிறது.

தூத்துக்குடி கொள்ளை சதிவழக்கு பூரண விசாரணை இந்தக் கோர்ட்டில் விசாரிக்கப்படும்.

# ஐவர் சிறையில் இன்று 70-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை : 9—11—1953 திங்கள்

## சென்ற ஏழு நாட்கள்!

கனம் சி. ஆர். சர்க்காரின் பயங்கர அடக்குமுறை மின்வேகத் தாக்குதலுக்கு ஆளாகி, தியாக வடுக்களை தனது மார்பில் தாங்கிக்கொண்டு, மேலும் இரட்டிப்பு உற்சாகத்தோடு, இலட்சியப் பாதையை நோக்கி துரிதமாக விரைந்துகொண்டிருக்கிற திராவிடம், சென்ற ஏழு நாட்களும், தனது நெஞ்சைத் திறந்து, தெளிவாகப் பேசி இருக்கிறது. திராவிடத்தின் ஒருமித்த குரல் அது. இரு பொருள்பட, இருட்டறையில் இருந்து திராவிடம், தனது எண்ணத்தை வெளியிடவில்லை. நல்ல மாலை வேளையில், பகலெனத்தகும் மின்விளக்கொளியில், உள்ளம் உடைந்திருப்பவரையும், உறங்கிக் கிடப்பவரையும், செயல்புரிய ஊக்கும் வகையில் பேரொலிக் கருவி கொண்டு கூவி, பல லட்சக்கணக்கானவர் இதயத் துடிப்பை ஒன்று திரட்டி, ஆச்சாரியார் சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. எச்சரிக்கை. புதிய ஆர்ப்பாட்ட அறிவிப்புமல்ல; வெறும் முகஸ்துதி பலகனி குழம்புமல்ல — தவறிய ஆட்சியாளரை, நேர்வழி திருப்ப, ஏவும் எதிர்ப்பாளர்களின் இடித்துரைபோகும் திராவிடத்தின் பெருங்குரல். இக்குரலில் கலந்துகிடக்கும் மக்களாட்சி மாண்பையும், புனிதத்தையும், கருத்தாலும், கண்களாலும் காணவேண்டும்—அமைச்சர் ஆச்சாரியார் அல்ல—அந்தச் 'சமரச ஞானி'யைப் பிரமுகராகக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியினர்!

எதிர்க்கட்சியினர் அமைப்பு என்பதற்கு, மக்களாட்சி முறையில், பொறுப்பற்றப் போக்கில் ஆட்சியாளர்களிடம் குறைகாணும் இயல்பு கொண்டு இயங்கும் ஒன்று அல்ல என்பதை, நமது தி. மு. கழகம் எத்தனையோ தரம் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் ஒளிவு மறைவு இல்லாமல் செயலில் காட்டி இருக்கிறது. மக்களாட்சி முறையில் கூறப்படும் எல்லா அறவழிகளும், ஆச்சாரியார் சர்க்காரால் அடைக்கப்பட்டுவிட்ட பின்னர்தான், அமைதியான நேரடி நடவடிக்கை என்ற அறப்போராட்டக் களத்தில் கால் வைத்தது, நமது தி. மு. கழகம்.

அடக்குமுறைகளை ஏவத் தருணம் பார்த்துக்கொண்டிருந்த அமைச்சர் ஆச்சாரியார், அவிழ்த்து விட்டார், பசியெடுத்துக் கிடந்த அடக்குமுறை உதிர வாய்களை. புல்வாய் ஆறினை, அந்தப் புலிகள் களத்திலே கொன்றுவிட்டன. இந்த அடக்குமுறை வரலாறு இத்துடன் முடிந்துவிடவில்லை. முடிவிற்குக் கொண்டுவரும் உயர்ந்த பண்பும் ஆளவந்தார்களிடம் எதிர்பார்ப்பதற்கு அரிதாக இருக்கிறது. அடக்குமுறைச் சதை தொடருகிறது! தொடர்ந்துகொண்டே இருக்கிறது!

அந்தத் தொடர்ச்சியிலே 'தூத்துக்குடி சதி வழக்கு' ஒரு அத்தியாயம். 'வழக்கு வாபஸ்பெற வேண்டும்' 'சம்மந்தப்படுத்தப் பட்டுள்ள தி. மு. கழகத் தோழர்களை விடுதலை செய்யவேண்டும்' என்ற எழுச்சிமிக்க இதய ஒலிகளை திராவிடம், சென்ற கிழமை, பட்டி தொட்டிகளில் இருந்தெல்லாம் கிளப்பி இருக்கின்றன.

அந்தக் குரல்கள் ஆளவந்தார்களின் அரண்மனைக் கதவுகளைத் தட்டுகின்றன—பலங்கொண்ட மட்டும். அரசியல் யூகமும், மக்களாட்சி கோட்பாட்டிற்குத் தலைவணங்கும் செம்மையும் ஆளவந்தார்களுக்கு இருக்கிறது என்பதை, உலகுக்கு மெய்ப்பித்துக் காட்ட, நல்லதோர் வாய்ப்பை, நமது தி. மு. கழகம் மனமுவந்து தந்திருக்கிறது. ஆளவந்தார்களுக்கு, எதிர்ப்பாளர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற பேத புத்தி இல்லாமல் இருக்குமானால், உடனடியாகத் திராவிடத்தின் இதய கோரிக்கையை நிறைவேற்ற முன்வர வேண்டும், திராவிடத்தின் இக்குரலை, காது செவிப்படுமபடியாகக் கேட்டும், சேனாதிபதிகளைப்போல ஆளவந்தார்கள் அடக்குமுறை நாடகம் ஆடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்களானால், அதன் விளைவு நமது தி. மு. கழகத்தைப் பாதிக்காது—ஆளவந்தார்களின் காங்கிரசையே சுக்குநூறாக்கும் என்பதை, நாம் அறிவிக்கத் தவறினால், மக்களாட்சி முறைக்கு நாம் செய்யும் மகத்தான, மன்னிக்க முடியாத துரோகச் செயலாகும் அது! அறிவித்து விட்டோம்; நமது கடமையை, மக்களாட்சி முறைக்கு ஏற்ப செய்து முடித்தோம்—அதுவும், செவ்வனே ஆற்றியுள்ளோம் என்று மகிழ்வோமாக!

நமது பொறுப்பு தீர்ந்தது; இனி ஆளவந்தார்களின் கடமைதான் நிறைவேற்றப் பாக்கியாக இருக்கிறது.

கண்டனக் கூட்டங்கள், தீர்மானங்கள் அனைத்தையும், தலைமை நிலைய பொறுப்பாளர் விருப்பத்திற்கிணங்க நிறைவுபட செய்து முடித்தத் தோழர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். பல்லாண்டு கூறுகிறோம். இவ்வளவு மகிழ்ச்சியிலும், பூரிப்பிலும் 'ஆறுதல்' என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. வழக்கு, வழக்கறிஞர் செலவு, அதற்குள்ள நமது தோழர்களின் கடமை இன்னும் நிறைவேறாமலே இருக்கிறது. நிறைவேற வேண்டும். அப்பொழுதுதான், நமக்கு வெற்றி நிச்சயம். எனவே, கடமையுணர்ச்சியோடு செயலாற்றும் கழக காளைகாள்! தூத்துக்குடி தோழர்கள்மீது கொண்டுள்ள குடும்பப் பாசத்தையும் கொஞ்சம் தாராளமாகக் காட்டிக்கொள்ளுங்கள். அணா கணக்கில, ரூபாய் கணக்கில் பெருந்தொகையாகக் குவிய வேண்டும், வழக்கு நிதி. ஆவன செய்யுங்கள்! வெற்றி நமதே!

# ஆச்சாரியார், பதவியை விட மறுப்பதற்கு கவர்னரின் கண்டனம்

## நயமாக, ஆனால் ஆணித்தரமாக அதிருப்தியை அறிவிக்கிறார்

"ஆளத் தகுதியற்றவர்—முன் யோசனையற்றவர்" என்று பொதுப்படையாக பிரகாசா புகலுகிறார்

சென்னை, நவ. 8—

"ஓய்வு பெற்றவர்களை இழுத்துவந்து பதவிகளை ஒட்ட வைப்பதால் பல கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரத்தைத் தகர்ப்பதற்குத்தான் தகுதியாக இருந்தனர். ஆனால் விறுவிறுப்பான ஜனநாயக ஆட்சியை நடத்துவதற்கு தகுதியானவர்கள் அல்ல. மேலும் அவர்கள் வாழ்நாளில் சுதந்திரம் கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை."

"வயதானவர்கள் ஒட்டிக்கொண்டிருந்தால், அவர்கள் சுயநலமிகள் என்றுகூட இளைஞர்கள் எண்ண ஆரம்பித்து விடுவர். வயதானவர்கள் எப்போது வெளியேறப் போகிறார்கள் என்று இளைஞர்கள் எதிர்பார்க்க துவங்கி விட்டனர்."

"சில தனிப்பட்டவர்கள், இன்றியமையாதவர்கள் என்று எண்ணிவிடக் கூடாது. இது ஜனநாயகத்தின் கொள்கைக்கே முரணானது. சரியான முறையைப் பின்பற்ற வேண்டும்."

—இவ்வாறு சென்னை கவர்னர் பிரகாசா பொது விவகாரக் கவுன்சில் முதலாவது ஆண்டு விழாவில் பேசியபோது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

இப்போது வேண்டியதெல்லாம் ஆக்க வேலைகள்தான், அழிவு வேலையல்ல. சாத்திய இயக்கம் தோன்றிய காலத்தில் கிளர்ச்சி மனப்பான்மை அவசியமாக இருந்தது. ஆனால் இப்போது அதற்கு அவசியமில்லை. நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை நன்கு விவாதித்து பரிகாரம் தேட வேண்டும். ஜனநாயகம் என்பது விவாதத்தின் மூலம் ஆட்சி நடத்துவது. இதில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்றும் பேசினார்.

## டில்லி நோக்கி பஞ்சாப் தொண்டர்கள்!

### பண்டிதர் மாளிகை முன் உரிமைப் போர்

பாட்டியாலா, நவ 8—

"பஞ்சாப் மாகாணம் ஏற்படுத்துக!" எனும் கோரிக்கையை லட்சியம் செய்யும் பண்டித நேருவின் மாளிகை முன்பு சாகும் வரை பட்டினி கிடக்க, பஞ்சாப் தொண்டர்கள், முன்வந்தவண்ணமிருக்கிறார்கள்.

இவர்களின் இரண்டாவது குழு 13-ந் தேதியன்று டில்லி போய்ச் சேரும். தொண்டர்கள் டில்லியிலுள்ள பண்டித நேருவின் மாளிகை முன்பு, தங்கள் எண்ணத்தை முழக்கியபடி—பட்டினி கிடப்பார்களாம்.

தங்கள் விருப்பத்தைக் கவனிக்கும் வரையில் இதனைத் தொடர்ந்து நடத்துவதென அகாலிதளம் முடிவு செய்திருக்கிறது.

### ஜகன் இந்தியாவுக்குப் புறப்படுகிறார்

லண்டன், நவ. 8—

கயானாவின் முன்னாள் பிரதமர் டாக்டர் ஜகன், அவருடைய சகா பான்ஹாமுடன் நவம்பர் 16ந் தேதி இந்தியாவுக்கு விமான மூலம் புறப்படுகிறார். அவர்கள் முதலில் டில்லிக்குச் சென்று அங்குள்ள அபிப்பிராயத்தை அறிந்து, அதன் பேரில் மேற்கொண்டு திட்டத்தை வகுப்பார்.

## "லைசென்ஸ் முறைக்குகலை விட்டுங்கள்"

### நாகபுரியில் பட்டாபி சீதாராமையா

நாகபுரி. நவ. 7—

"பணம் கடன் கொடுக்கும் இனத்தாரையும், கள்ளச் சந்தைக்காரர்களையும் அறவே ஒழித்துவிட்டு, பண்டங்களை கூட்டுறவு முறையில் மக்கள் வாங்கி விற்பனை செய்ய வேண்டும்,"

என்று மத்திய பிரதேச கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமையா மக்களைக் கேட்டுக்கொண்டார்.

31-வது சர்வதேச கூட்டுறவாளர்கள் நாள் விழாவை டாக்டர் பட்டாபி சீதாராமையா தொடங்கி வைத்தார். அவர் அப்போது கூறியதாவது:

"70 ஆண்டுகளில் வெள்ளையர்களை வெளியேற்றி விட்டோம்; ஆனால், 50 ஆண்டுகளில் சமூகத்திலிருந்து கடன் கொடுப்போரை அகற்ற முடியவில்லை.

"பொருள்கள் வாணிபத்தில், வணிகர்கள், நேர்மையாக மார்க்கட்டுகளை நடத்த கட்டுப்பாடு செய்ய முடியவில்லை."

"ஏமாற்றுவது ஒரு கலையாகி விட்டது. அது சமூக வாழ்க்கையில் நுழைந்து நம் வணிகத்தில் விஞ்ஞான ரீதியாக அமைந்து விட்டது. வணிகர்கள் மாத்திரம் இலதைக் கையாளவில்லை. உழவர்களுக்கிடையேயும் இது புகுந்துவிட்டது. பித்தலாட்டம் மடிய கூட்டுறவு அவசியம்;"

# ஐவர் வழக்கு: சர்க்கார் அப்பீல் மனு ஏற்பு!

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணதுரை மற்றும் தோழர்கள் மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன் ஆகியோருக்கு சென்னை முதல் மாநில மாஜிஸ்திரேட் அளித்த தண்டனை போதாதென்றும, அதே சட்டத்தின் கீழ் மேலும் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்றும கோரி சென்னை சர்க்கார் செய்த அப்பீல் மனு இன்று உயர்நீதி மன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாய்தா நாளும், வழக்கின் விபரமும் நாளை வெளியிடப்படும்.

## பிச்சை எடுக்கும் நிலைமை!

பம்பாய், நவ. 8—

பம்பாய் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்த வண்ணமிருக்கிறது. படித்தவர்களில் பலேகர் நீண்ட காலமாக வேலையில்லாது தவிப்பதால், அவர்களில் சிலர் பிச்சை எடுக்கக்கூட துணிந்துவிட்டனர்.

ஜூலையில் பதிவு செய்துகொண்ட வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 19,352; இதில் 1638 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்துள்ளது. செப். பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 14 220; இதில் 1187 பேர்களுக்கே வேலை கிடைத்தது.

## பிரதமர்கள் மாநாடு

இந்தூர், நவ 8—

மாநில முதன் மந்திரிகள் மாநாடு இம்மாதம் 28-ம் தேதி லட்சுமணபுரியில் பிரதம மந்திரி நேருவின் தலைமையில் நடைபெறும் எனத் தெரிகிறது.

பொது நிர்வாகம் பற்றோடல்லது, 5 ஆண்டுத் திட்டம், முதலிய விஷயங்கள் பற்றி மாநாட்டில் ஆலோசனை நடக்குமென்று தெரிகிறது.

## சுதந்திர சங்கநாதம்!

கெய்ரோ, நவ. 7—

சுதந்திரத்திற்காகப் போராட்டம் நடத்தத் தயாராக இருக்கும்படியும், ஒவ்வொரு எகிப்தியரும் தேச உணர்ச்சியுடன் தன் பங்கை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் எகிப்து தேசிய பாதுகாப்புப்படைத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பம்பாய் பால் திட்டத்திற்கு ஐ. நா பாராட்டு

நியூயார்க், நவ. 9—

பம்பாயில் சுத்தமான பால் 30,00,000 பேர்களுக்கு சப்ளை செய்யும் திட்டத்தை ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் மிகவும் பாராட்டி எழுதியுள்ளது.

# உத்தியோகம் அளிப்பதில் வடிகட்டின 'வகுப்புவாத'த்தை

## சி. ஆர். வழிகாட்டியாகக் கொண்டுள்ளார்

## ஓமந்தூரார் 'டிஸ்மிஸ்' செய்த 'அய்யர்'

### ஒருவருக்கு ஆச்சாரியார் மீண்டும் பதவி அளித்திருக்கிறார்

## நிதி அமைச்சர் சுப்ரமணியம் இதை மறுத்துக்கூறத் தயாரா?

### வடாற்காடு மாவட்ட செயலாளர் வெளியிடும் தகவல்

அரக்கோணம், நவ 8—

அண்மையில், பொள்ளாச்சியில் பேசிய நிதிஅமைச்சர் சி. சுப்ரமணியம் அவர்கள், ஆச்சாரியாரை ஆதரித்தும், பிராமணர் என்ற காரணத்தால் அவரை எதிர்க் கட்சியினர் எதிர்க்கிறார்கள் என்றும், பிராமணர் என்பதால் ஆச்சாரியார் பதவியேற்ற 18 மாத காலத்தில் எந்த பிராமணருக்கும் அதிகச் சலுகை காட்டவில்லை என்றும், இதை, தாம் நிதிஅமைச்சராக இருப்பதால், புள்ளிவிவரத்தோடு தன்னால் நிரூபிக்க முடியுமென்றும் பேசியிருக்கிறார்.

பார்ப்பனர் என்ற காரணத்திற்காக, பதவி அளித்த குற்றம் மட்டுமல்ல; லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு நீக்கப்பட்ட ஒரு அதிகாரிக்கு மீண்டும் பதவி தந்திருக்கிறார், ஆச்சாரியார்!

1948-ம் ஆண்டில், தோழர் ஓ. பி ராமசாமி ரெட்டியார் பிரதமராக இருந்த காலத்தில், ரங்கநாத அய்யர் (சி. வி) என்பவர், வட ஆற்காடு ஜில்லா, குடியேற்றம் தாலுகா தாசில்தாராக வேலை செய்து வந்தார். இவர் 'ரேஷன் சில்லரை வியாபாரி'களிடம் ஏராளமான பணம் லஞ்சமாக வாங்கியதாகப் பொது மக்களின் புகார் கடிதம் ஒன்று சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. சர்க்கார் தரப்பில் இதை விசாரிக்க சி. ஐ. டி.-யை அனுப்பினார்கள். குற்றம் உண்மைதான் என்று, சி. ஐ. டி. மூலம் சர்க்காருக்குத் தெரிந்தது, இவரை வேலையிலிருந்து நீக்கிவிட சர்க்கார் உத்திரவிட்டது.

வேலை இழந்த அதிகாரி, அப்பொழுது கவர்னராக இருந்து வந்த பவநகர் மகாராஜாவிடம் கருணை மனு கொடுத்தார். கருணை மனுவை கவர்னர் நிராகரித்துவிட்டார். இது நடந்தது, 1948—49-ம் ஆண்டில்.

ஆனால், 1952-ல், அதே அதிகாரி, மீண்டும் பிரதமர் ஆச்சாரியாரின் உதவியை நாடி, அவர் மூலம் 'கருணை மனு' போட்டார். இது பிரதமர் ஆச்சாரியாரின் சிபாரிசுடன் கவர்னருக்கு அனுப்பப்பட்டது. கவர்னரால், மீண்டும், டிஸ்மிஸ் செய்யப்பட்ட உத்திரவை ரத்து செய்து, 1953 மே மாதம் முதல் தாசில்தாராகப் பணியாற்ற உத்திரவு பிறப்பித்து, அதே அதிகாரி தற்போது வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள செய்யாற்றில் (திருவத்திபுரம்) வேலை பார்த்து வருகிறார்.

### பொது மக்களின் பணம் ரூ. 4000 பாழ்

இதில் இன்னொரு அநீதி என்னவென்றால், வேலை யிழந்து கிடந்த சுமார் மூன்றரை ஆண்டு காலத்தை லீவாகப் பாவித்து, முழுச் சம்பளம் சுமார் ரூ 4000 அவருக்குத் தர வேண்டுமென உத்திரவாகியுள்ளது!

மேற்படி அதிகாரி தனக்கு 'பதவி உயர்வு' வேண்டுமென்று மனு போட்டிருக்கிறார். அதுவும் சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது!

ஒரு கவர்னர் நிராகரித்த கருணை மனுவை, மற்றொரு கவர்னர் ஏற்றுக் கொள்ளலாமா? அப்படி ஏற்றுக் கொண்டாலும் முந்திய அரசாங்க உத்திரவுக்கு முற்றிலும் புறம்பாக இருக்கலாமா? பொது மக்கள் வரிப்பணம் ரூ 4000 பாழ் ஆகும் அளவில இவர் உத்திரவு இருக்கலாமா?—என்பதுதான் நமக்குத் தெரியவில்லை. இதற்குப் பெயர் எந்தவிதஜனநாயகமோ நாமறியோம்!

இந்த அளவிற்கு நிர்வாகக் குழப்பம் செய்திருக்கையில், நிதி அமைச்சர் இவ்வாறு பரிந்து பேசுவது வேடிக்கையாயிருக்கிறது!

குறிப்பு:—இது விஷயமாய் 1953-ம் ஆண்டு மே திங்களில நான் இச்செய்தியை பல பத்திரிகைகளில வெளியிட்டேன். இதுவரை சென்னை சட்ட சபையில் எதிர்க் கட்சியினர் ஏதும் கேட்கவில்லை. ஆனால், பாராளுமன்றத்தில் மட்டும் தோழர் பி. என். ராஜகோபால் நாயுடு இது விஷயமாய் கேள்வி கேட்டும் சரியான பதில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### தேவை

ஜப்பான் சிலிண்டர் மிஷின்களுக்கு, திறமை வாய்ந்த மிஷின் மேன்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன்,

N. V. கோபால் கம்பெனி,
63, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத் தெரு, சென்னை—1.
என்ற முகவரிக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

## திருவனந்தபுரத்தில் 144

திருவனந்தபுரம், நவ. 8—

இந்து வெள்ளியன்று நடைபெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்தை யொட்டி, திருவனந்தபுர மாவட்ட மாஜிஸ்திரேட் நேற்று முதல் ஒருவார காலம் நிற்கு தடை உத்திரவு பிறப்பித்துள்ளார். இதன்படி கல்வி நிலையங்கள் முன்போ, வேறு இடங்களிலோ, ஊர்வலமாகச் செல்லுதல், பொதுக்கூட்டம், உண்ணாவிரதம், கோஷமிடுதல் ஆகியவையும், நகர முழுவதும், வேறு எந்த ஆர்ப்பாட்டமும் தடை செய்யப்பட்டுள்ளது.

## ஜோதி வெங்கடாசலம் காங்கிரசில் சேர்ந்தார்

### இது இராசராமர் வேலையாம்!

சென்னை, நவ. 8—

மதுவிலக்கு அமைச்சர் ஜோதி வெங்கடாசலத்தை, தாம், 4 அணா உறுப்பினராகக் காங்கிரசில் சேர்த்துவிட்டதாக, அமைச்சர் ராஜாராம் நாயுடு நேற்று மாலை செங்கற்பட்டு, சென்னை காங்கிரஸ் ஊழியர்கள் மாநாட்டில் கூறினார்.

மந்திரி ஜோதி வெங்கடாசலம் பேசுகையில், தான் பொதுச் சேவை செய்யவே அமைச்சர் பதவி ஏற்றதாகக் குறிப்பிட்டார்.

## மாண்ட அருணசலம் மீண்டார்!

— (:) —

### டஸ்டி மில்லர் புகழ் ஒளி வீசுகிறது

### டெரியின் கலை அந்தஸ்து இருள் சூழ்ந்தது!

சென்னை, நவ 9—

நேற்று என் ஐ. ஏ. ஏ. விளையாட்டு அரங்கில், காணத்தகுந்த —ஆனால், பயங்கரமான குத்துச் சண்டை நிகழ்ச்சி நடைபெற்றது. வேறு ஐந்து சிறிய குத்துச் சண்டை சம்பவங்களும் நிகழ்ந்தன. எல்லாச் சண்டைகளும் ஆங்கில முறையைப் பின்பற்றி இருந்தனவாகும்.

முதல் பிரிவில் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்களின் மாணவரான குடி ஆர்பட் வெற்றி பெற்றார். நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று நம்பிக்கையூட்டும் முறையில் குடியினுடைய கை அசைவு இருந்தது.

2-வது பிரிவு:—தோழர்கள் கனகராவும், யங் மாசியும் சண்டைபிடித்தனர். மாசியின் அரிதத் தாக்குதல், அவருடைய நீண்டகால பயிற்சியை விளக்கிக் காட்டுவதாக இருந்தது. சி. ஆர் பாலசுந்தரம் அவர்கள் மாணவரான கனகராவ் கலைத்திறம் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது. கலையை வெளிப்படுத்து முறையிலேயே, இருவரும் போரிட்டது கவர்ச்சிகரமாக இருந்தது. போராட்ட முடிவு சமமாகிவிட்டது.

3-வது பிரிவு:—தோழர்கள் ஜோவசவும், எம். ஏ முத்துவும் போரிட்டனர். வசவின்மீது இறுதித் தாக்குதலுக்கு முந்து மூபன்றபோழுது, கலை நுணுக்க இறுதித் தாக்குதலுக்கு முந்து பலியாகி, மூக்கிற்குமேல் நெற்றியில் குருதி கொட்ட ஆரம்பித்தது. தோல்வியும் தொடர்ந்தது.

4-வது பிரிவு:—தோழர்கள் பாட்லின் கிங்கும், கோல்டன் பாயும் குத்துச் சண்டைக்கு கிளம்பினர். இரண்டாவது கட்டத்திலேயே கோல்டன் பாய் கீழே விழுந்துவிட்டார். மீண்டும் எழுந்திருக்க முடியாத அளவிற்கு அவருடைய காலில் நசை புரண்டுவிட்டது. கிங்கிற்கு உதவி கமிஷனர் தோழர் பரமசிவப்பனார் அவர்கள் 'பெல்ட்' அளித்தார்.

5-வது பிரிவு:—பெரிய ஜதை! மக்கள் பார்க்க ஆர்வம் கொண்டு கூடியிருந்த காட்சி! குத்துச்சண்டை கலை நுணுக்கத்தில் சிறந்து விளங்கிய என். ஏ. அருணாசலத்தை கலை நடைமுறை ஒழுங்குக்குப் புறம்பாக வீழ்த்தி வெற்றி பெற்ற டைகர் டாட் டோரிக்கும் கல்கத்தா சாம்பியன் டஸ்டி மில்லருக்கும் 12 'ரவுண்ட்' குத்துச்சண்டை நடைபெற்றது.

ஏற்கனவே டெர்ரி, மில்லரிடம் தோற்றுப்போயிருப்பது தெரிந்த விஷயம். டெர்ரி, அருணாசலத்திடம் பெற்ற 'கச்சை'யை நமக்குக் காட்டி, மில்லரை குத்துச் சண்டைக்கு அழைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

டெர்ரி, இயல்பாகவே சாது என்று சொல்லப்படுகிறது. ஆனால், 'களத்'தில் இயல்புக்கு மாறுபட்டுக் காணப்படுகிறார். கலை நுணுக்கத்தில் மில்லருக்குக் குறைந்தவராகத்தான் டெர்ரி இருக்கிறார்.

தனது கலைத் திறனைக் காட்டுவதில் மில்லருக்குள்ள ஆர்வம் போலவே, டெர்ரிக்கு, தனது மிருக பலத்தைக் காட்டுவதில் ஆர்வம் இருக்கிறது.

ஆறு 'ரவுண்டு'க்குப் பிறகு, மில்லரை எதிர்த்து டெர்ரியால் களத்தில் நிற்க முடியவில்லை. தோல்வி நிச்சயம் என்ற பீதியும் டெர்ரியின் முகத்தில் இந்தக் கட்டத்திலேயே தோற்றமளிக்கத் துவங்கிவிட்டன. 12-வது 'ரவுண்டு'ல் டெர்ரி தோற்றார். நல்லசாலியானவர் ஒருமுறை கீழே விழுந்துவிட்டதும், இறுதியில் நிலைகுலைந்து, நிற்க முடியாது சாய்ந்துவிடும் நிலை பெற்றதும் இக்கலையில் பயிற்சியுடையவர்களுக்கு நன்கு படிப்பினையாக அமைந்திருக்கிறது. குத்துச் சண்டை, தனி நபர்களின் பலப் பரீட்சை அல்ல; கலை நுணுக்கத்தை வளர்க்கும் முயற்சியாகக் கொள்வதுதான் சிறந்தது.

மில்லர் வெற்றி பெற்றார்—டெர்ரியின் குத்துச் சண்டை வரலாறு இத்துடன் அஸ்தமனமாய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

பார்வையாளர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து, குத்துச் சண்டையை ரசிக்கும் முறையில் இடை இடையே நிகழ்ச்சி அறிவிப்புகளை நகைச்சுவையுடன் அளித்து வந்த தோழர் சி. ஆர் பாலசுந்தரம் குழுவினர் பாராட்டுதலுக்குரியவராவர்—இந்த காட்சிகளை மக்களுக்கு அளித்த தோழர் தான் அவர்களை குத்துச் சண்டை பிரியர்கள் மறக்க மாட்டார்கள்.

## வேத வித்துக்கள், 'வேத வியாசர்' பந்தலில் வம்பளக்கப் போகின்றன!

## துவேஷத் தேள்! அழுக்காறு அரவம்! மாநாட்டுப் பிரதிநிதிகள்!

### 'வகுப்புவாதி'களின் முகாம் உருவாகிறது!

நவம்பர் மாதம் 20-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு, திருச்சிராப்பள்ளி டவுனில் அமைக்கப்படவிருக்கும் "வேதவியாசர் பந்தலில்" 5-வது சென்னை மாகில பிராமணர் மாநாடு நடைபெறும்.

வி. கே. வைத்தியநாத ஐயர் தேசியக் கொடியை ஏற்றிவைப்பார்.

வி. ஜி. இராமச்சந்திர ஐயர் மாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

எல். ஹாலாசியம், பி. ஏ, பி எல்., "ஆஸ்திக நூல் கண்காட்சி" திறந்துவைப்பார்.

எஸ். சுந்தரேசய்யர் "அந்தணர் அன்பு இயக்கம்" என்ற பகுதியை ஆரம்பித்து வைப்பார்.

அந்தணர் அரங்கம் ஆதரவில், பிரசித்தியடைந்த பேராசிரியர்கள், ஜட்ஜ்கள், அட்வகேட்டுகள், பண்டிதர்கள், தலைவர்கள், பிரமுகர்கள் பேசுவார்கள். எம். எஸ் சுப்பிரமணி ஐயர் தலைமை வகிப்பார்.

மாநாட்டில் சமஸ்கிருத பிரசார ஸமிதியின் 4-வது வருஷாந்திர விழாவும் நடைபெறும் எஸ். மகாலிங்க சாஸ்திரி வருஷாந்திர விழா பிரசங்கம் நிகழ்த்துவார் டாக்டர் பி. எஸ். சுப்பிரமணி சாஸ்திரி தலைமை வகிக்க இசைந்துள்ளார்.

21—11—1953-ல், 2-வது சென்னை மாகில பிராமணயுவர் மாநாடு தனியே கூடுகிறது இதை பசுபதி திறந்துவைப்பார். மணி ஐயர் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

"உமா பரிணயம்" என்ற சமஸ்கிருத நாடகம் தனியே நடைபெறும். டாக்டர் சர். சி. பி. ராமசுவாமி ஐயர் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

மாநாட்டில் சேவை செய்ய 500 பிராம்மண யுவர்கள் கொண்ட ஒரு தேசியத் தொண்டர் படை நியமிக்கப்பட்டது.

## பொய் சொல்லி பலம் தேடும் சிறுமை!

### என்றைக்கிருந்தாலும் உண்மை அம்பலமாகும்

அரக்கோணம், நவ 5—

வாலாஜா ரோடு ரயில்வே ஸ்டேஷனில் ரயிலை நிறுத்திய தி. மு. கழகத்தினர் இருவர் (மூர்த்தி, சுந்தரம்) மன்னிப்பு கேட்டதால், வழக்கு வாபஸ் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியதாக பத்திரிகைகளில வெளிவந்துள்ளது.

எனவே, எங்கள் மீதுள்ள வழக்கை வாபஸ்பெற வேண்டுமென்றும் கோரினர். ஆனால், ஸ்தல போலீசார், வழக்கு பதிவான பிறகு இத்தகைய சமாதானம் உண்மையாயிருந்தாலும் ஏற்கமாட்டார்கள் என்றும், வேண்டுமென்றால் மன்னிப்புக் கடிதம் எழுதிக்கொடுத்தால் அவர்கள் மீதுள்ள வழக்கு வாபஸ்பெறப்படுமென்றும் கூறினார்கள். உடனே அவர்கள், 'நாங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களல்ல; அப்படி நாங்கள் மன்னிப்புக் கடிதம் தருவது?' என்று கேட்டார்கள்.

அதற்குப் போலீசார், 'நீங்கள் கழகமோ, இல்லையோ எங்களுக்குத் தெரியாது; மன்னிப்புக் கடிதம் எழுதித் தந்தால் வழக்கை வாபஸ்பெற முடியும்.' என்று கூறியதின்பேரில் எழுதித் தந்துள்ளார்கள்.

உண்மை இவ்வாறிருக்க, சொல்லைக்கேக பங்கம் வந்துவிட்டதைப் போல அதிகாரி கூறுவதும், அதை மிகைப்படுத்தி தேசிய ஏடுகள், முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவதும் கண்டிக்கத்தக்கதாகும்.

குறிப்பு.—தி. மு. கழக ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட இருவர் (வாலாஜா) மன்னிப்புகேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் மீது தொடரப்பட்டிருந்த வழக்கு வாபஸ்பெறப் பட்டதென நவ. 4-ந் தேதி 'தினமணி'யிலும், நவ. 3-ந் தேதி 'சுதேசமித்திரனி'லும் வெளிவந்தன.

# 'சதி வழக்கை வாபஸ் பெறுக'

—(:)—

# தமிழகமெங்கும் 'தூத்துக்குடி வாரம்'

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், "தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி, அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பி"யும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியின் சம்பந்தப்பட்டவையாதலால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பிரசுரித்துள்ளோம்.

### மதுரை

1—11—53-ல், மதுரையில், தூத்துக்குடி வாரப் பொதுக்கூட்டம் தோழர் எம். அய்யாச்சாமி தலைமையில் திலகர் திடலில் நடைபெற்றது. தோழர்கள் சமதர்மம், எஸ். முத்து ஆகியோர் பேசியபின், தோழர் இரா. இளம்வழுதி அவர்கள் தூத்துக்குடி தோழர்கள்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கு பற்றியும், ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமையை விளக்கியும், கா. பூவிலங்கெள் இந்த நேரத்தில் நீலக்கண்ணீர் வடிப்பதுபற்றியும் விளக்கமாக சொற்பொழிவாற்றினார்.

### வடுகபட்டி

சோழவந்தான் வட்டார வடுகபட்டியில் (மதுரை மாவட்டம்) தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் 3—11—53-ல், வி. கே சிந்தனைச்சிற்பி தலைமையில் நடைபெற்றது.

### சைதை

6—11—53-ல், தூத்துக்குடி வாரம் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் க. முருகேசன் தலைமை வகித்தார். தோழர்கள் த. இளங்கோ, பி. அண்ணாமலை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### தேவசேரி

3—11—53-ல், தி. மு. கழகக் கூட்டம், தோழர் க. காமாட்சி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. அ. அழகுமணி, என். என். நடராசன் ஆகியோர் பேசினர்.

### சூரப்பள்ளி

2—11—53-ல் தி. மு. கழக சார்பில், குப்பம்பட்டியில, மாரியம்மன் கோயில் முன்னுள்ள மைதானத்தில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் சி. குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. கிருட்டிணன், 'பகுத்தறிவு' ஆசிரியர் ப. கண்ணன் ஆகியோர் பேசினர்.

### திருப்பூர்

1-11-53-ல், பழைய ரேடியோ மைதானத்தில், தூத்துக்குடி தினப் பொதுக்கூட்டம் தோழர் கே. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தூத்துக்குடி சம்பவங்களைப் பற்றியும், தோழர்கள் மீது சர்க்காரால் சுமத்தப்பட்டிருக்கும் சதி வழக்குகளைப் பற்றியும் பேசினார்.

தூத்துக்குடி நிதிக்காக உண்டியல் வசூல் ரு 7—11—4-ஐ தோழர் ஆசைத்தம்பியிடம் கொடுக்கப்பட்டது.

### அபிராமம்

2—11—53-ல், தி. மு கழகப் பொதுக் குழுக் கூட்டம் தோழர் ரங்கா தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் இல. மு சாமி, ந. பா. திராவிட தாசன், அண்ணா அன்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### இராயப்பேட்டை

சென்னை இராயப்பேட்டை தி. மு. கழக 37-வது வட்டத்தின் சார்பில் 7—11—53-ல் கழகக் கட்டடத்தில் தோழர் மு. புரட்சிமணி தலைமையில் 'தூத்துக்குடி வாரக்' கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இளம்பரிதி, மு அரங்கநாதன், முரளி, இராசபாதர், புருசோத்தமன், ஷெரீப், டி ஞானசேகரன் ஆகியோர் தூத்துக்குடி வாரம் கொண்டாடும் அவசியத்தையும், இனி நமது கடமை என்ன என்பதைப் பற்றியும் விளக்கிப் பேசினர்

### திருமழிசை

இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில 6—11—53ல், 'தூத்துக்குடி நாள்' கொண்டாடப்பட்டது. அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் கை. சம்மந்தம் தலைமை வகித்தார். தோழர்கள் என். எஸ். தென்னரசு, குன்றத் கணபதி, காஞ்சி கே. டி. எஸ். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### வடக்கநந்தல்

1—11—53ல், தோழர் வே. விநாயத்தான் தலைமையில் வடக்கநந்தல் சத்திரத்தில், தி. மு கழகக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, பல தீர்மானங்கள் நிறைவேறியது.

### குனியமுத்தூர்

5—11—53ல், தி. மு. கழக சார்பில், 'தூத்துக்குடி நாள்' பொதுக்கூட்டம் தோழர் கே. எ. பி. முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பஞ்சு பாலசுந்தரம், கோவை அரசு, சு. ஆறுமுகம், எஸ். ஏ இராசமாணிக்கம் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

### சீர்காழி

5-11-53ல், சீர்காழி வடக்கு வீதியில் தோழர் ஒலி அவர்கள் தலைமையில் தூத்துக்குடி நாள் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தூத்துக்குடி வழக்கு பற்றியும், ஆரம்பக் கல்வித் திட்டம் பற்றியும், கல்லக்குடி, தூத்துக்குடி துப்பாக்கி பிரயோகம் பற்றியும் பேசினார்.

### பொன்மலை மேலக் கற்கண்டார்கோட்டை

1—11—53ல், கழக இல்லத்தில், கழக உறுப்பினர், அனுதாபிகளடங்கிய கூட்டம் தோழர் எஸ். கனிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் தூத்துக்குடி நிகழ்ச்சி பற்றி சொற்பொழிவாற்றினர்.

### சூளேசுவரன்பட்டி

1—11—53ல், தி. மு. கழக சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் அ. அழகிரிசாமி தலைமை வகித்தார். தோழர்கள் அ. கருப்புசாமி, சீனிவாசன், ப நாராயணன் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

### நெல்லை

1-11-53ல், காலை 11 மணிக்கு நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது மாலை 2-30 முதல் 4 மணி வரை ஊழியர் கூட்டம் நடைபெற்றது மாவட்டச் செயலாளர் தோழர் வீரபாகு, போராட்ட காலத்திலும், மற்றைய நேரத்திலும் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றியும், மாவட்டத்தில் சிறை சென்று திரும்பிய தோழர்கட்கு நன்றி தெரிவித்தும் பேசினார். பின் 4-15 மணிக்கு மாபெரும் ஊர்வலம் கழக அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, நெல்லை நகரை சுற்றி திரு. வி. க. திடல் வந்து சேர்ந்தது. 7 மணிக்கு திரு வி. க. திடலில், 'தூத்துக்குடி நாள்' மாவட்ட சிறை சென்றோர் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி தலைமை தாங்கி பேசினார். பின், எம். ஆர். கணேசன் சொற்பொழிவாற்றினார்.

### கோமளீஸ்வரன்பேட்டை

5—11—53 அன்று காலை தோழர் செங்குட்டுவன தலைமையில 'தூத்துக்குடி நாள்' கொண்டாடப்பட்டது. தோழர் மருதவாணன் சொற்பொழிவாற்றினார்.

---

## திருவனந்தபுரம் மாணவர்களுக்கு சிறை

திருவனந்தபுரம், நவ 7— நேற்று பல்கலைக் கழக அலுவலகத்துக்கெதிரில் மாணவர்களுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட சச்சரவின் விளைவாக கைது செய்யப்பட்ட ஐந்து மாணவர்கள் நகர மாஜிஸ்திரேட் முன் ஆஜர் படுத்தப்பட்டனர். மூன்று மாணவர்களுக்கு தலா ரூ 25 அபராதமும் தவறினால் ஒரு வார வெறுங் காவல் தண்டனையும் விதித்தார். ஒருவரே அபராதம் செலுத்தினார்; மற்ற இருவர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். உண்ணாவிரதமிருந்த தோழர் ஒருவரும் அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தார்.

## தி. மு. கழக ஏட்டை......

★

(1 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செங்கற்பட்டு, நவ. 8— செங்கற்பட்டு தி மு. கழகச் சார்பில், தர்கா மைதானத்தில். 8—11—53 ஞாயிறு மாலை "தூத்துக்குடி வாரம்" பொதுக் கூட்டம் தோழர் சி. பி வேணு தலைமையில் நடைபெற்றது. மதுராந்தகம் தோழர் பாலு பேசிய பின், தோழர் மு புரட்சிமணி "தூத்துக்குடி வாரம்" பொதுக் கூட்டம் நடத்துவதின் அவசியம் பற்றியும், தூத்துக்குடி சதி வழக்கு பற்றியும், இந்த நேரத்தில் கழகத் தோழர்களின் கடமை பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

பின்னர், காஞ்சி-நகர சபை உறுப்பினர் தோழர் சி. வி. இராசகோபால் பேசியதாவது:

"தான் செய்யும் அக்கிரமங்கள் மக்களுக்குத்தெரியாமலிருப்பதற்காக ஆண்டவனையும், கீதையையும் காட்டி, மக்கள் எண்ணத்தை வேறு வழியில் திருப்ப ஆட்சியிலுள்ள ஆச்சாரியார் முயல்கிறார். சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருக்கிறது அவரிடத்தில்."

"சீன நாட்டின் சியாங்-கே-ஷேக்கிறகும், காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவிற்கும் ஏற்பட்ட முடிவுதான், சட்டத்தை அலட்சியம் செய்யும் ஆச்சாரியாருக்கும் ஏற்படும் என்பதைக் கூற விரும்புகிறேன்"

பின்னர், தோழர் கே. டி. எஸ். மணி பேசியதாவது:

30 ஆண்டுகளாகத் தொடர்ந்து நம்மைப் பார்த்து ஏசியும், கிண்டல் செய்தும், புத்தகங்களைத் தடை செய்தும், கடைசியாக இப்பொழுது தடிகொண்டு தாக்கியும், அப்பாக்கிக் கொண்டு சுட்டும். 9 பிணங்களை வீழ வைத்து, 5000 பேரை சிறையில் வைத்து சொற்செல்வர்களையும், அறிஞர்களையும் சிறையில் வைத்த பிறகு இப்பொழுது கூறுகிறார் ஆச்சாரியார், அழித்து விடுவேன் ஒழித்து விடுவேன், என்று? இவரால் முடியுமா?"

பின்னர், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசியதாவது:

"அப்பாவிகளான அறுவரை சுட்டுக் கொன்றது இந்த சர்க்கார். அதுவும் நம்முடைய ரயில் நிறுத்தப் போராட்டத்தால் எவ்வித சொத்து சேதமும், இரா சேதமும் ரயில்வேக்கு ஏற்படாத போதே சுட்டுக் கொன்றது அறுவரை, படுகாயப் படுத்தியது பலரை. இதை மறைக்கத்தான, மக்கள் எண்ணத்தை இதனின்று வேறுபுறம் திருப்பத்தான சர்க்கார் நம் தோழர்கள் மீது சதி வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளது. அதுவும் அந்தப் புதுக் கிராம சம்பவம் நடக்கையில் வெளியில் இல்லாத முதல் நாளே கைது செய்யப்பட்டு காவலில் இருந்த தோழர்கள் கே. வி. கே. சாமி, தங்கப்பழம் போன்றோரையும் இச்சதி வழக்கில் ஈடுபடுத்தியுள்ளது. இன்னும் பல நிரபராதிகளையும், இவ்வழக்கில் ஈடுபடுத்தியுள்ளது. எனவேதான் இவ்வழக்கில் நாம் வாதாடி வெற்றி பெறுவதற்கு உங்களுடைய பண உதவியும், கையெழுத்துக்கள் சேகரித்து அனுப்புதல போன்ற காரியங்களில் உங்களுடைய ஒத்துழைப்பும் அதிகம் தேவை. இவற்றை நீங்கள் உங்களாலியன்ற அளவு பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறேன்"

"நம்மைப் பார்த்து வகுப்புவாதி என்று கூறும், ஆச்சாரியார் தான் வகுப்புவாதியே யன்றி நாமல்ல; இதை நான் கூறவில்லையே; காங்கிரஸ் தோழர்களே கூற ஆரம்பித்து விட்டனர். 'பேரிகை' போன்ற காங்கிரஸ் ஏடுகள் எழுதவும் முற்பட்டுவிட்டது. அதுமட்டுமல்ல; சட்டசபை முடிவை மதித்து நடக்காத இவர் ஜனநாயகத்தைப் பற்றிப் பேச, தகுதியுள்ளவரா என்று தேசியத் தோழர்களும், பொது மக்களும் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, உங்களுடைய பூரண ஒத்துழைப்பையும தூத்துக்குடி வழக்கு சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்"

செயலாளரால் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது. தூத்துக்குடி வழக்கு நிதிக்காக கூட்டத்தில் உண்டியல் மூலம் ரூ. 12—1—3 வசூலாயிற்று.

---

### இடமாற்றம்

சென்னை, சூளை தி. மு. கழகம், நெ. 17, மாணிக்கச் செட்டி தெரு, சூளை, என்ற முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என அறிவிக்கப்படுகிறது.

---


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மறந்துவிடாதீர்கள்!

# தூத்துக்குடி சதி வழக்கில்

96 தோழர்கள் சிக்கியுள்ளனர்; அவர்கள்மீது 16 கடும் சட்டப் பிரிவுகள் வீசப்பட்டுள்ளன

★

எதிர் வழக்காட

## நமது பக்கம் 7 வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்

★

கழகத் தோழர்களை விடுவிக்க, பயங்கரக் குற்றச்சாட்டுகளை உடைத்தெறிய, கழகத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற,

## நிதி தாருங்கள்!

நீதி காண உதவுங்கள்!!

★

நீங்கள் தரும் உதவியைப் பொறுத்திருக்கிறது, நாம் அடையும் வெற்றியின் அளவு!

★

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.,
பொருப்பாளர், தி. மு. க. தலைமை நிலையம், சென்னை

கீழ்க்கண்ட முகவரிக்கு நிதி அனுப்புக:—
அ. பொன்னம்பலனார், "அறிவகம்," இராயபுரம், சென்னை-13

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


### காலத்தின் கோலம்!

கையேந்துகிறார் அப்துல்லா!

புதுடில்லி, நவ. 7— காஷ்மீரத்தின் 'முடிசூடா மன்னர்' போல விளங்கிய ஷேக் அப்துல்லா, சிறையிலிருந்தபடி பண்டித நேருவுக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்.

தனனை அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் —என்பதே, அந்தக் கடிதத்தின் நோக்கமெனக் கூறப்படுகிறது. காஷ்மீர் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ஜாதிக்குக்கும் இவ்வண்ணம் ஒரு கடிதம் எழுதியுள்ளாராம.

கைதியோ—காவலில் வைக்கப்பட்டிருப்பவரோ, அ. நி. சபைக் கூட்டத்திலும, சட்டசபைக்கூட்டங்களிலும கலந்துகொள்ள அனுமதிக்கக் கூடாதென்பது, காஷ்மீரத்தின் சட்டமாகும்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். [illegible]